**<u>மதுரை மாநகராட்சி</u>**

**<u>மாண்புமிகு மேயர் தலைமையில் நடைபெற்ற</u>**

**<u>26வது மாமன்ற கூட்டத்தின் தீர்மானங்கள்</u>**

**<u>12.02.2024ந் தேதி நேரம்: காலை: 10.30 மணி</u>**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு**

**மாண்புமிகு மேயர் அவர்களின் நன்றி தெரிவிக்கும் தீர்மானம் 1**

மாண்புமிகு தமிழ்நாடு முதலைமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் ஐயா அவர்கள் தலைமையில் திமுக அரசு பொறுப்பேற்றது முதல் முதலீடுகளை ஈர்ப்பத்தில் முன்னனி மாநிலமாக தமிழகம் திகழ்ந்து வருகிறது. கடந்த 33 மாத ஆட்சிக்காலத்தில் பல்வேறு ஒப்பந்தங்கள் மூலம் 8.65 இலட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது.

வரும் 2030ம் ஆண்டிற்க்குள் தமிழகத்தில் பொருளாதாரம் 1 டிரில்லியன் அமெரிக்கா டாலரை எட்ட வேண்டுமென மாண்புமிகு தமிழ்நாடு முதலைமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் ஐயா அவர்கள் தொடர்ந்து முயற்சியையும் முன்னின்று செய்து வருகிறார்.

தமிழ்நாட்டை தொழில்துறையில் தலைசிறந்த மாநிலமாக உயர்த்த மாண்புமிகு தமிழ்நாடு முதலைமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் ஐயா அவர்கள் ஸ்பெயின் பயணம் மூலம் 3 ஆயிரத்து 440 கோடி ரூபாய்க்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது.

ஒரு மாபெரும் தொழிற்புரட்சிக்கான அடித்தளத்தை தமிழகத்தில் உருவாக்கி தந்த **மாண்புமிகு தமிழ்நாடு முதலைமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின்** ஐயா அவர்களுக்கு இம்மாமன்றம் தனது மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

**மாமன்ற தீர்மானம் எண்**: 396

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு**

**மாண்புமிகு மேயர் அவர்களின் நன்றி தெரிவிக்கும் தீர்மானம் 2**

பெருமைமிக்க தமிழர்களின் பாரம்பரியமிக்க வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டியை உலக அளவில் மேலும் பெருமை சேர்க்கும் வகையிலும், உலகத் தமிழர்கள் எல்லாம் மகிழ்ச்சி கொள்ளும் வகையிலும் இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத வகையில் உலகத்தரம் வாய்ந்த வகையில் ஜல்லிக்கட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்த பிரமாண்டமான அரங்கம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் ஐயா அவர்கள் கடந்த 2022 ஆம் ஆண்டு தமிழக சட்டப்பேரவையில் அறிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் ஐயா அவர்கள் 24.01.2024ம் தேதி அன்று மதுரை மாவட்டம் அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் இயற்கை எழில் கொஞ்சும் வகுத்துமலை அடிவாரப் பகுதியில் 68.80 ஏக்கர் நிலப்பரப்பில், 77,683 சதுர அடி பரப்பளவில் 62.78 கோடி ரூபாய் செலவில் உலகின் முதல் பிரம்மாண்டமான ஏறுதழுவுதல் அரங்கமான **கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை** திறந்து வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் ஐயா அவர்களுக்கு இம்மான்றம் தனது மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

**மாமன்ற தீர்மானம் எண்: 397**

**மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டு வரப்பட்ட சிறப்பு தீர்மானம்**

மதுரை மாநகராட்சி மண்டலம் 5 (மேற்கு) வார்டு எண் 74 பழங்காநத்தம் பகுதியில் 15CFC-NCAP நிதியில் ரூ 74.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பூங்கா வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகிறது. தமிழ் தமிழர் தமிழ்நாடு என முழு மூச்சாக உழைத்த முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தமிழக அரசால் சிறப்பாக கொண்டாடப்பட்டு வரும் இத்தருணத்தில் மதுரை மாநகராட்சி சார்பாக இப்பூங்காவிற்கு **கலைஞர் நூற்றாண்டு பூங்கா** என பெயர் சூட்ட அரசின் ஒப்புதலை பெற அரசுக்கு கடிதம் தயார் செய்து அனுப்ப மாமன்றத்தின் தகவலுக்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**மாமன்ற தீர்மானம் எண்: 398**

**மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டு வரப்பட்ட சிறப்பு தீர்மானம்**

1913 ம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சியில் குற்றப்பரம்பரை சட்டம் அமல்படுத்தப்பட்டது. இது தமிழகத்தில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இச்சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தினந்தோறும் காவல் நிலையம் சென்று கைரேகை இட்டு வந்தனர். ஆங்கிலேயேர்கள் ஒவ்வொரு ஊராக சென்று கைரேகை வைக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தனர். 1920ம் ஆண்டு ஏப்ரல் 3ம் தேதி அன்று மதுரை அருகே உள்ள பெருங்காமநல்லூர் கிராமம் சென்று கைரேகை வைக்க வேண்டும் என்று தெரிவித்தனர் அதற்கு அங்குள்ள பிறமலைக் கள்ளர் சமுதாயத்தினர் நாங்கள் ஒன்றும் குற்றவாளிகள் இல்லை என்று கைரேகை இட மறுப்பு தெரிவித்தனர். இதனால் ஆங்கிலேயர்களுக்கும் கள்ளர் சமுதாயத்தினர்க்கும் இடையே ஏற்பட்ட யுத்ததில் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டு 17 பேர் கொல்லப்பட்டனர். துப்பாக்கி சூட்டில் பாதிக்கப்பட்டு உயிர்க்கு போரடிக்கொண்டிருந்த ஆண்களுக்கு தண்ணீர் கொடுக்க சென்ற மாயக்காள் என்ற பெண்மணியும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

**இந்நிகழ்வில் வீரமரணம் அடைந்த பெருங்காமநல்லூர் தியாகிகள் நினைவாக அவர்களின் தியாகத்தை போற்றும் விதமாக மதுரை மாநகராட்சி ஆரப்பாளையம் ரவுண்டான பகுதியில் பெருங்காமநல்லூர் தியாகிகள் நினைவு தூண் அமைக்க அரசின் ஒப்புதலை பெற அரசுக்கு கடிதம் தயார் செய்து அனுப்ப மாமன்றத்தின் தகவலுக்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.**

**மாமன்ற தீர்மானம் எண்: 399**

**1. MH1/014131/2022**

மதுரை மாநகராட்சி 5 மண்டலம் 100 வார்டு பகுதிகளில் வெளிக்கொணர்வு முகமை மூலம் திடக்கழிவு மேலாண்மை (Solid Waste Management) பணிகள் தனியார் நிறுவனம் மூலம் செயல்படுத்துவதற்கு (Solid Waste Management) நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு Roc.No.35883/2022/EA1-SWM-11 நாள் : 17.02.2023ல் வழங்கப்பட்டது.

மேற்கண்டவாறு டெண்டர் கோரப்பட்டு வரப்பெற்ற மூன்று ஒப்பந்த புள்ளிகளில் தொழில் நுட்பதகுதி உடையவர்(கோப்பின்படி) வரிசைஎண்: 1, 2 மட்டும் ஆவார். இருவரின் ஒப்பந்த புள்ளியினை ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் (Price Bid) M/s.Ourland Engineering works (P) Ltd., Chennai.–L1 என்பவர் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ளதால் பொதுசுகாதார அத்தியாவசிய அவசியம் கருதி மேற்படி நிறுவனத்திற்கு மூன்று ஆண்டுகளுக்கு பணிஉத்தரவு 22.09.2023 அன்று வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 400**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**2. மநு4/12783/2021**

| | |
|---|---|
| பொருள்: | மதுரை மாநகராட்சி – பொது சுகாதாரபிரிவு – 100 வார்டுகளில் உள்ள சாலைகளில் சுற்றிதிரியும் – கொண்டியாய் மாடுகள், கன்றுகள், குதிரைகள் உள்ளிட்ட கால்நடைகளை ஒழுங்குப்படுத்துவது – தொடர்பாக. |
| பார்வை: | 1. தமிழ்நாடு பொதுசுகாதார சட்டம் 1939<br>2. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998<br>3. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023<br>4. இந்திய தண்டனைச்சட்டம் 1860 |

சாலை மற்றும் பொது இடங்களில் கொண்டியாய் திரியும் கால்நடைகளால் ஏற்படும் தொல்லைகளை கட்டுப்படுத்தும் பொருட்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு கீழ்கண்டவாறு பொறுப்புகள் ஒதுக்கீடுசெய்யப்பட்டு உள்ளது.

- தமிழ்நாடு பொதுசுகாதார சட்டம் 1939 பிரிவு 41(3), 41(4), 44, 51(1), 61,131
- தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புச்சட்டம் 1998 பிரிவு 105,106,107, 177(2)
- தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023, விதிஎண் 292
- திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016, விதிஎண் 15 (zf)
- விலங்குகள் வதைதடுப்பு சட்டம் (Prevention of Cruelty to Animals Act, 1960)
- இந்தியதண்டனைச் சட்டம் 1860, பிரிவு 268, 289 & 503 ன்படி

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்டபட்ட பகுதிகளில் சாலைகளில் கொண்டியாய் திரியும் கால்நடைகள் பிடிக்கப்பட்டுமற்றும் மாடுதொழுவத்தில் அடைக்கப்பட்டு மாடு ஒன்றிக்கு அபராதம் தொகை ரூ.3000/- மற்றும் கன்றுகளுக்கு அபராததொகை ரூ.1500/- மேலும் நாள் ஒன்றிற்க்கு பராமரிப்பு செலவாக ரூ.500/- வசூலிக்கப்பட்டுவருகிறது. ஆனால் கொண்டியாய் திரியும் கால்நடைகளால் ஏற்படும் இடையுறுகள், தொல்லைகள் மற்றும் சாலைவிபத்துகள் அதிகரித்துக் கொண்டேசெல்கிறது.

எனவே இதனை ஒழுங்குபடுத்தி கட்டுபடுத்தும் பொருட்டு அபாராத தொகையினை உயர்த்தியும், தொடர்ச்சியாக இரண்டு முறைக்குமேல் விதிகளை மீறும் மாடுகளை பொது ஏலத்தில் விற்கவும் கீழக்கண்டவாறு மன்றபொருள் கோரப்படுகிறது.

1. **<u>கால்நடைகள் பதிவு மற்றும் உரிமம் வழங்குதல்:</u>**

**தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 105** மற்றும் **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 பிரிவு 292**ன்படி மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கால்நடைகள் வளர்க்கும் உரிமையாளர்கள் ஆண்டு தோறும் கால்நடைகளுக்கு உரிமம் பெற்றிடவேண்டும்.

அ.) கால்நடைவளர்க்கும் உரிமையாளர்கள் ஒவ்வொருகால் நடைக்கும் தனித்தனியாக கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு சம்பந்தப்பட்ட வார்டு சுகாதார ஆய்வாளர்க்கு முறையீடு செய்து ஒரு ஆண்டிற்கு கீழ்கண்டவாறு உரிமம் கட்டணம் செலுத்தி, ஆணையாளர் அல்லது அவரால் நியமிக்கப்படும் அலுவலரிடம் உரிமம் பெற்றிடவேண்டும்.

| வ.எண் | கால்நடைவிபரம் | உரிமம்தொகை(ரூ.) |
|---|---|---|
| 1. | மாடுகள் | 100/- |
| 2. | கன்று | 50/- |
| 3 | குதிரை | 150/- |
| 4 | கழுதை | 150/- |
| 5 | நாய்கள் | 100/- |
| 6 | பன்றி | 100/- |

**<u>நிபந்தனைகள்:</u>**

- கால்நடைகளை தொழுவம் அமைத்து சுகாதார முறையில் பராமரிக்கப்பட வேண்டும்.
- கால்நடைகளை சாலைகளில் அல்லது பொது இடங்களில் வைத்து பராமரிக்ககூடாது.
- தொழுவம் ஆனது குடியிருப்பு பகுதிகளில் அமைக்ககூடாது.
- **கால்நடை வளர்க்கும் உரிமையாளர்கள் தங்கள் கால்நடைகளை தொழுவத்தில் கட்டி வளர்க்க வேண்டும். அதனை சாலைகளில் திரியவிடக் கூடாது.**
- பொது மக்கள் மற்றும் சுற்றுப்புற பகுதிகளுக்கு எவ்வித இடையூறு இல்லாமல் வளர்த்திட வேண்டும்.
- கால்நடைகளால் உருவாகும் திடமற்றும் திரவுக்கழிவுகளை(Liquid Waste Management) சொந்தவாகனம் அமைத்து மாநகராட்சி சுகாதார ஆய்வாளரால் அறிவிக்கப்படும் இடத்தில் அப்புறப்படுத்தப்பட வேண்டும். மாநகராட்சியின் பொது குப்பை தொட்டியில் அப்புறப்படுத்தகூடாது.

- கால்நடைகளால் உருவாகும் திரவக்கழிவுகளை சாலைகளிலோ, நீர்நிலைகளிலோ, மாநகராட்சி பாதாளசாக்கடைகள் மற்றும் மழைநீர் கால்வாயில் அப்புறப்படுத்தக்கூடாது.
- கால்நடை பராமரிப்பதனால் அந்த இடத்தில் கொசு உற்பத்திக்கு வாய்ப்புகள் ஏற்படாத வண்ணம் இருத்தல் வேண்டும்.
- தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள், 2023 பிரிவு 292(4) ல் உள்ள விதிகள் பின்பற்றப்பட வேண்டும்.

ஆ.) கால்நடை வளர்க்கும் உரிமையாளர்கள் தொழுவத்திற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு சம்பந்தப்பட்ட வார்டு சுகாதார ஆய்வாளரிடம் முறையீடு செய்து ஒரு ஆண்டிற்கு ஒரு சதுர அடிக்கு ரூ.10/- செலுத்தி, ஆணையாளர் அல்லது அவரால் நியமிக்கப்படும் அலுவலரிடம் உரிமம் பெற்றிடவேண்டும்.

- **தொழுவம் ஆனது குடியிருப்பு பகுதிகளில் அமைக்ககூடாது.**
- கால்நடை வளர்க்கும் உரிமையாளர்கள் தங்கள் கால்நடைகளை தொழுவத்தில் கட்டி வளர்க்க வேண்டும். அதனை சாலைகளில் திரியவிட கூடாது.
- பொதுமக்கள் மற்றும் சுற்றுப்புற பகுதிகளுக்குஎவ்வித இடையூறு இல்லாமல் வளர்த்திட வேண்டும்.
- கால்நடைகளால் உருவாகும் திடக்கழிவுகளை சொந்தவாகனம் அமைத்து மாநகராட்சி சுகாதார ஆய்வாளரால் அறிவிக்கப்படும் இடத்தில் அப்புறப்படுத்தப்பட வேண்டும். மாநகராட்சியின் பொது குப்பை தொட்டியில் அப்புறப்படுத்த கூடாது.
- கால்நடைகளால் உருவாகும் திரவக்கழிவுகளை சாலைகளிலோ, நீர்நிலைகளிலோ, மாநகராட்சி பாதாளசாக்கடைகள் மற்றும் மழைநீர் கால்வாயில் அப்புறப்படுத்தக்கூடாது.
- தொழுவத்தினை தினந்தோறும் கிருமிநாசினி தெளித்துநோய் தொற்று ஏற்படாதவாறு பராமரிக்கப்பட வேண்டும்.
- கால்நடை பராமரிப்பதனால் அந்த இடத்தில் கொசு உற்பத்திக்கு வாய்ப்புகள் ஏற்படாத வண்ணம் இருத்தல் வேண்டும்.

**2. <u>தெருக்களில் அவிழ்த்துவிடப்பட்ட கால்நடைகள் மீது நடவடிக்கை:</u>**

- **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 106**ன்படி மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொண்டியாய் அவிழ்த்து விடப்பட்ட கால்நடைகளை சம்பந்தப்பட்ட வார்டு சுகாதாரஆய்வாளர்கள் முன்னிலையில் மாநகராட்சி ஊழியர்கள் மூலம் பிடித்து Spot Fine விதிக்கப்பட்டும், மேலும் உரிமை கோராத கால்நடைகளை மாநகராட்சி கால்நடை காப்பகத்தில் பராமரிக்கப்பட்டு கீழ்கண்டவாறு அபராதம் விதிக்கப்படும்.

| **வ.எண்** | **குற்ற விபரம்** | **தற்போதைய அபராதத் தொகை** | **திருத்திய அபராதத் தொகை (ரூ.)** |
|---|---|---|---|
| 1. | Spot Fine<br>(மாடு, குதிரை, பன்றி) | இனம் இல்லை | 3,000/- |
| 2. | Spot Fine<br>(கன்று, கழுதை) | இனம் இல்லை | 1,500/- |

| வ.எண் | குற்ற விபரம் | தற்போதைய அபராதத் தொகை | திருத்திய அபராதத் தொகை (ரூ.) |
|---|---|---|---|
| | மதுரை மாநகராட்சியின் காப்பகத்தில் பராமரிக்கப்படும் உரிமை கோராதகால நடைகளுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகை விபரம். | | |
| 3. | முதல் முறை (மாடு, குதிரை, பன்றி) | 3000/- | 5,000/- |
| 4 | முதல் முறை (மாடு, குதிரை, பன்றி) | 1500/- | 2,500/- |
| 5 | இரண்டாம் முறை (மாடு, குதிரை) | இனம் இல்லை | 10,000/- |
| 6 | இரண்டாம் முறை (கன்று, கழுதை) | இனம் இல்லை | 5,000/- |
| 7 | இரண்டு முறைக்குமேல் அல்லது 5 நாட்களுக்கு மேல் உரிமை கோரப்படாதவை (மாடு, குதிரை, பன்றி) | இனம் இல்லை | 20,000/- அல்லது மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் பொதுஏலம் விடப்படும். |
| 8 | இரண்டு முறைக்கு மேல் அல்லது 5 நாட்களுக்கு மேல் உரிமை கோரப்படாதவை (கன்று, கழுதை) | இனம் இல்லை | 10,000/- அல்லது மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் பொதுஏலம் விடப்படும். |
| 9 | மதுரை மாநகராட்சி கால்நடை காப்பகத்தில் பராமரிக்கப்படும் கால்நடைகளுக்கு பராமரிப்பு தொகையான நாள் ஒன்றிருக்கு ரூ.300/- வசூலிக்கப்படும். | | |
| 10 | மாநகராட்சியால் உரிமம் பெறாமல் மாநகர எல்லையில் எந்தவித கால்நடைகளை வளர்க்ககூடாது. அப்படிப்பட்ட கால்நடைகளை கைப்பற்றி ஆணையாளர் அவர்கள் அவற்றினை பொதுஏலம் மூலம் அப்புறப்படுத்தலாம். | | |

**3. <u>பிடிக்கப்பட்ட கால்நடைகளை பராமரித்தல்:</u>**

**தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 பிரிவு 292**ன்படி மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொண்டியாய் திரியும் கால்நடைகளை பிடித்து மதுரை மாநகராட்சி கால்நடை காப்பகத்தில் அடைத்து உரிமையாளர் வரும் வரை பராமரிக்கப்படும்.

இதனை மாநகர விலங்கியல் நலஅலுவலர் / உதவிநகர்நலஅலுவலர் அவர்களின் தலைமையில் பராமரிக்கப்படும்.

- விலங்குகள் வதைதடுப்பு சட்டம் **(Prevention of Cruelty to Animals Act, 1960)**ன்படி எவ்வித துன்புறுத்தலுமின்றி கால்நடைகள் பிடித்து அடைக்கப்பட வேண்டும்.
- கால்நடைகளுக்கு தேவையான உணவு மற்றும் தண்ணீர் முறையாக வழங்கப்படும்.
- கால்நடை உரிமையாளர்கள் அடையாள அட்டை நகல் மற்றும் உறுதிமொழி(ரூ10/- மதிப்புள்ளபத்திரதாளில்) வழங்கி கால்நடைகளை திரும்ப பெற்று கொள்ளலாம்.

- இதனை 2 மாதத்திற்கு ஒரு முறை மாநகர் நல அலுவலர் அவர்களால் ஒருங்கிணைப்பு (Reconcile) செய்யப்பட வேண்டும்.

4. **காவல்துறை மூலம் மேற்கொள்ளவேண்டியநடவடிக்கைகள் :**
**இந்திய தண்டனைச் சட்டம் 1860, பிரிவு 268, 289 & 503**ன்படி மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொண்டியாய் திரியும் கால்நடைகள் மாநகராட்சி ஊழியர்கள் பிடிக்கையில் சம்பந்தப்பட்ட கால்நடை உரிமையாளர்கள் அல்லது பொது மக்களால் ஏற்படும் இடையுறுகளுக்கு மாநகராட்சி மாநகர் நலஅலுவலர் மூலம் காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேற்கண்ட விபரங்கள் அடிப்படையில் கொண்டியாய் திரியும் கால்நடைகள் பிடித்து அபராதம் விதிக்க மற்றும் இதர நடவடிக்கைகள் மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 401**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**3. H4(HF1/H6)/9150/14**

மதுரை மாநகராட்சியில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் பொது சுகாதார பிரிவில் சமுதாய அமைப்பாளராக பணியாற்றி 26.03.2014 முதல் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ள திருமதி.நா.மனோன்மணி என்பவருக்கு மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை வழக்கு Cont.WP(MD) No. 2323 of 04.02.2022 ன் படியும் நீதிமன்ற அவமதிப்பு செயற்குறிப்பாணையை தவிர்க்கும் பொருட்டு 01.07.2021 முதல் 30.06.2022 வரை 75% பிழைப்பூதியம் பிடித்தம் உட்பட மொத்த நிலுவை தொகை ரூ.2,36,496/-ம் மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண் WP(MD) NO 13914 of 2023 உத்தரவு நாள் 14.06.2023ன் படியும் , நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை செயல்முறை ஆணை எண்: 7586/2018/UPA நாள்:30.05.2023 படியும், (Under Suspension) Placed Under Suspension NotPermitted to retire 31.05.2023 அனுமதிக்கப்பட்ட பிழைப்பூதியம் 01.07.2022 முதல் 31.05.2023 வரை மட்டுமே **(வயது முதிர்வு)** உத்தரவிடப்பட்ட காலத்திற்கான பிழைப்பூதியம் நிலுவை தொகை ரூ.**2,28,646/-யை** பொது நிதியிலிருந்து இரு கட்டமாக வழங்கப்பட்டமைக்கும், வழங்கப்பட்ட தொகையை மீளப்பெற்று மாநகராட்சி பொது கணக்கில் ஈடுசெய்வதற்க்கும், மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டி ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 402**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**4.H4/03591-1 /2022**

மதுரை மாநகராட்சி 5 மண்டலம் 100 வார்டு பகுதிகளில் கொண்டியாய் திரியும் நாய்களால் போக்குவரத்து விபத்து, மனிதர்கள் கடிபடுவது தடுப்பு நடவடிக்கை “நாய்கடிரேபிஸ்” **வெறிநோய் தடுப்பூசி சிறப்பு முகாம்** 18.09.2023 முதல் 28.09.2023 வரை காலை 06.00 மணி முதல் **(முற்பகல்)** 10.00 மணி வரை10 நாட்கள் பணிமேற்கொள்ள தேவையான மருந்துவ உபகரணம், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் **IEC** மேற்கொண்டமைக்கான பில் பட்டியல் தொகை **Rs.1,00,000/-**பொதுநிதியிலிருந்து வழங்கப்பட்டமைக்கும் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 403**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**5.ஆ4(ஆ6)/003580/2022**

மதுரை மாநகராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (CLC) நிறுவனம் மூலம் வெளிக்கொணர்வு அடிப்படையில் 01.07.2022 முதல் கணினி இயக்குபவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்கு தற்பொழுது நாள் ஒன்றுக்கு தினக்கூலி ஊதியம் ரூ.675/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.Roc.No.e-666478/2023/E2 நாள்.10.06.2023-ன்படி நாள் ஒன்றுக்கு தினக்கூலி ஊதியம் ரூ.719/- ஆக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தினக்கூலி ஊதியம் ரூ.675/- லிருந்து ரூ.719/- ஆக உயர்த்தி வழங்கவும், தற்பொழுது பணிபுரிந்து வரும் 63 கணினி இயக்குபவர்களுக்கு 01.02.2024 முதல் 30.04.2024 வரை ஒப்பந்த பணிக்காலம் நீட்டிப்பு செய்தும், நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.719/- வீதம் மாதத்திற்கு 26 நாட்களுக்கு மிகாமல் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (CLC) வெளிக்கொணர்வு நிறுவனம் மூலம் பணிபுரியும் 63 கணினி பணியாளர்களுக்கு பின்வருமாறு ஊதியம் நிர்ணயம் செய்யப்படுகிறது.

| One man power / per month (26 Days) (18694 X 63) | EPF minimum (Rs.15000 X 63=945000* 13%) | ESI 3.25% (608 X63) | SUB TOTAL | Service Charge (2%) | 63 Man power / per months | Total Salary 63* 3 months |
|---|---|---|---|---|---|---|
| 1177722 | 122850 | 38304 | 1338876 | 26778 | 1365654 | 4096962 |

மேற்கண்ட உத்தேச செலவினம் ரூ.40,96,962/-ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 404**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**6.J2/Amrut 2.0/00969/2024**

மதுரை மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதியுடன் கடந்த 2011-ம் ஆண்டு இணைக்கப்பட்ட வார்டுப் பகுதிகளில் வைகை ஆற்றின் தென்கரைப் பகுதிகளில் இணைக்கப்பட்ட வார்டுப் பகுதிகளுக்கு புதியதாக பாதாளசாக்கடை அமைப்பினை ஏற்படுத்தவும், வைகையாற்றின் வடகரைப் பகுதிகளல் விடுபட்ட பகுதிகளுக்கும், புதியதாக விரிவாக்கமடையும் பகுதிகளுக்கும், மதுரை மாநகரில் உள்ள கழிவு நீரேற்று நிலையங்களை சீரமைக்கவும் ரூ.**452.42–**கோடி திட்ட மதிப்பீட்டில் பாதாளசாக்கடை அமைக்கும் பணிகளை மேற்கொள்ள(Amrut 2.0-UGSS) அரசாணை எண்.148 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் :22.11.2023-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது

இந்நிலையில் இத்திட்டப்பணிக்கு ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியுடன் (SMIF-TN-III) (PSGF) மானியமாக ரூ.111.52–கோடியாகவும், (SMIF-TN-III) TNUDF (Loan) கடன் தொகையாக ரூ.111.53-கோடியாகவும், மத்திய அரசின் மானியமாக ரூ.113.11-கோடியாகவும், மாநில அரசின் மானியமாக ரூ.135.73-கோடியாகவும் ஆக மொத்தம் ரூ.471.89–கோடி எனபணியின் மதிப்பு திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக TNUIFSL நிறுவனத்தின் 19.01.2024–ந் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. Revised Project Cost: Rs.471.89crores
2. O&M Cost on completion of the project is Rs. 5.23 crores per annum.
3. Connections, Deposit & Tariff :

| Details | Proposed | |
|---|---|---|
| | Domestic | NonDomestic |
| Connections | 78975 | 302 |
| Weighted Average Deposit (in.Rs.) | 9475 | 25712 |
| Weighted Average Tariff (in Rs./month) | 144 | 553 |

Based on the above deposit & tariff, it is observed that the projected revenues proposed to be generated do not cover the operation & maintenance cost and debt service. The project is not financially viable on a stand-alone basis and requires additional financial support form its general funds to cover the deficit in O & M cost and debt service. Therefore, considering the general financial position of Madurai Corporation, the project may be posed under KfW assisted SMIF-TN-III provided Madurai Corporation resolves in its Council to carry out the following:

1. To take up the Under Ground Sewerage Scheme in Madurai Corporation under KfW assisted SMIF-TN-III with the following means of finance, deposit and tariff:

a) Means of Finance:

| Sl. | Details | Amount (Rs. in crore) | Percentage |
|---|---|---|---|
| 1 | Loan from Tamil Nadu Urban Development Fund(TNUDF) underKfWassisted SMIF-TN-III | 111.53 | 23.64% |
| 2 | Grant from Project Sustainability Grant Fund( PSGF) under KfWassisted SMIF-III | 111.52 | 23.63% |
| 3 | Grant from Government of India under AMRUT 2.0 | 113.11 | 23.97% |
| 4 | Grant from Government of Tamil Nadu under AMRUT 2.0 | 135.73 | 28.76% |
| | Total | 471.89 | 100.00% |

b). Deposit & Tariff: Amount in Rs.

| Area in Sqft | Domestic | | Non-Domestic | |
|---|---|---|---|---|
| | Deposit | Tariff/ (Per Month) | Deposit | Tariff/(Per Month) |
| <600 | 7500 | 120 | 15000 | 360 |
| 601-1200 | 10000 | 150 | 20000 | 450 |
| 1201-1800 | 12500 | 180 | 25000 | 540 |
| 1801* | 15000 | 210 | 30000 | 630 |
| Weighted Average | 9475 | 144 | 25712 | 553 |
| *This is the base rate for the plinth area of 1801 sq.ft. The deposit and tariff for plinth area above 1801 sq.ft. have to be increased in proportion to the increase in plinth area. | | | | |

2). To increase the amount of deposit and tariff at the rate of 10% every 5 years.
3). To meet the Interest During Construction (IDC) from the general fund of the Corporation.
4). To improve the tax collection efficiency to not less than 80% within a period of two years and maintain the same level or above thereafter.
5). TO meet deficit in O&M and debt service from general funds of the Corporation.
6). To meet deficit in any, in the water supply and drainage account from the general funds of the Corporation.

எனவே மேற்கண்ட திட்டப்பணிக்காக TNUIFSL - நிறுவனம் மூலம் மானியத் தொகை ரூ.111.53-கோடி மற்றும் கடன் தொகை ரூ.111.52-கோடியை பெறுவதற்காக அரசுவிதிகளின்படி Loan Application தயார் செய்து TNUIFSL நிறுவனத்திற்கு அனுப்பி மேல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதியினை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 405**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**7.மதி5/001248/2023**

மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – திருப்பரங்குன்றம் வட்டம் – மண்டலம் 5 – திருப்பரங்குன்றம் கிராமம், வார்டு : **97** – சர்வே எண்கள்: 311/3, 311/4B, 311/5–ல் **1.90** ஏக்கர் **(7700.00** சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க. உத்தேச சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்பிற்கான இடத்தினை ஆணையாளர், மதுரை மாநகராட்சி பெயருக்கு பத்திர பதிவு செய்து அதன் அசல் ஆவணங்களுடன் உதவி இயக்குநர், உறுப்பினர் செயலர்(பொ) மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம். மதுரை அவர்களின் ந.க.எண்: 3742/2022/SWP/CO35XU33/2022/TCP, dt: 09.1.2023-ம் தேதிய செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு இவ்வலுவலகம் வரப்பெற்றுள்ளது.

மேற்கண்ட மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – திருப்பரங்குன்றம் வட்டம் – மண்டலம் **5** – திருப்பரங்குன்றம் கிராமம், வார்டு : **97** – சர்வே எண்கள்: 311/3, 311/4B, 311/5–ல் **1.90** ஏக்கர் **(7700.00** சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் **சாலைக்கான இடம் Iவது (1–1) சாலையானது 65.04 மீட்டர் நீளமும், 09.00 மீட்டர் அகலமும் (30 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் IIவது (2–2) சாலையானது 38.67 மீட்டர் நீளமும், 10.00 மீட்டர் அகலமும் (33 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் IIIவது (3–3) சாலையானது 84.14 மீட்டர் நீளமும், 09.00 மீட்டர் அகலமும் (30 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் IVவது (4–4) சாலையானது 57.11 மீட்டர் நீளமும், 09.00 மீட்டர் அகலமும் (30 அடி சாலையாகவும்), மூலை முடக்கு 4.50 சதுர மீட்டர் உட்பட மொத்தம் 2220.74 சதுர மீட்டர் இடத்தினை பத்திரம் எண்: 5259/2022, நாள்: 12.12.2022-ம் தேதி மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடம் - 40.38 சதுர மீட்டர் இடத்தினை பத்திரம் எண்: 5259/2022, நாள்: 12.12.2022-தேதியில** மதுரை மாவட்டம், மதுரை தெற்கு ரிடி, திருப்பரங்குன்றம் சப்டி, மதுரை தெற்குத் தாலுகா, தற்போது திருப்பரங்குன்றம் தாலுகா, திருப்பரங்குன்றம் கிராமம், ஆணையாளர் மதுரை மாநகராட்சி என்ற பெயருக்கு பதிந்த அசல் ஆவணங்கள் மற்றும் மனைப்பிரிவில் தார் சாலை அமைத்து அதன் புகைப்படம் ஆகியவற்றை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடங்களை மாநகராட்சி வசம் உள்ள சாலை பதிவேட்டில் பதிவு செய்ய (Road Register) UTIS மென்பொருளில் பதிவு செய்து காலிமனை வரிவிதித்தற்கும்

நகரமைப்பு குழு ஒப்புதல் பெறப்பட்டு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 406**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8.மதி2/006258/2023**

மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மதுரை மேற்கு வட்டம் – மண்டலம் 2 – கோச்சடை கிராமம், வார்டு : 66 – நகரளவை எண்கள்: 15/1B1–ல் 0.56 ஏக்கர் (2265.76 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க. உத்தேச சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்பிற்கான இடத்தினை ஆணையாளர், மதுரை மாநகராட்சி பெயருக்கு பத்திர பதிவு செய்து அதன் அசல் ஆவணங்களுடன் உதவி இயக்குநர், உறுப்பினர் செயலர்(பொ), மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம். மதுரை அவர்களின் ந.க.எண்: 7840/2022/SWP/CAEATUPM/2022/TCP, நாள்: 19.05.2023-ம் தேதிய செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு இவ்வலுவலகம் வரப்பெற்றுள்ளது.

மேற்கண்ட மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மதுரை மேற்கு வட்டம் – மண்டலம் 2 – கோச்சடை கிராமம், வார்டு : 66 – நகரளவை எண்கள்: 15/1B1–ல் 0.56 ஏக்கர் (2265.76 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் **சாலைக்கான இடம் Iவது (1–1) சாலையானது 85.26 மீட்டர் நீளமும், 09.00 மீட்டர் அகலமும (30 அடி சாலையாகவும்), மூலை முடக்கு உட்பட மொத்தம் 767.35 சதுர மீட்டர் இடத்தினை பத்திரம் எண்: 1874/2023, நாள்: 11.05.2023-ம் தேதி மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடம் - 7.54 சதுர மீட்டர் இடத்தினை பத்திரம் எண்: 1874/2023, நாள்: 11.05.2023-தேதியல்** மதுரை மாவட்டம், மதுரை மேற்குத் தாலுகா, கோச்சடை கிராமம், ஆணையாளர் மதுரை மாநகராட்சி என்ற பெயருக்கு பதிந்த அசல் ஆவணங்கள் மற்றும் மனைப்பிரிவில் தார் சாலை அமைத்து அதன் புகைப்படம் ஆகியவற்றை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடங்களை மாநகராட்சி வசம் உள்ள சாலை பதிவேட்டில் பதிவு செய்ய (Road Register) UTIS மென்பொருளில் பதிவு செய்து காலிமனை வரிவிதித்தற்கும் நகரமைப்பு குழு ஒப்புதல் பெறப்பட்டு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 407**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**9.மதி5/008449/2022**

மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – திருப்பரங்குன்றம் வட்டம் – மண்டலம் 5 – திருப்பரங்குன்றம் கிராமம், வார்டு : 99 – சர்வே எண்கள்: 227/2 & 229/1C1, 1C2–ல் 1.99 ஏக்கர் (8050.00 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க. உத்தேச சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்பிற்கான இடத்தினை ஆணையாளர், மதுரை மாநகராட்சி பெயருக்கு பத்திர பதிவு செய்து அதன் அசல் ஆவணங்களுடன் உதவி இயக்குநர், உறுப்பினர் செயலர்(பொ) மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம். மதுரை அவர்களின் ந.க.எண்: 759/2022/மதி2, நாள்: 08.07.2022-ம் தேதிய செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு இவ்வலுவலகம் வரப்பெற்றுள்ளது.

மேற்கண்ட மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – திருப்பரங்குன்றம் வட்டம் – மண்டலம் 5 – திருப்பரங்குன்றம் கிராமம், வார்டு : 99 – சர்வே எண்கள்: 227/2 & 229/1C1,

1C2–ல் 1.99 ஏக்கர் (8050.00 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் **சாலைக்கான இடம் Iவது (1–1) சாலையானது 76.31 மீட்டர் நீளமும், 10.00 மீட்டர் அகலமும் (33 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் IIவது (2–2) சாலையானது 55.73 மீட்டர் நீளமும், 09.00 மீட்டர் அகலமும் (30 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் IIIவது (3–3) சாலையானது 78.58 மீட்டர் நீளமும், 07.20 மீட்டர் அகலமும (23 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் IVவது (4–4) சாலையானது 79.87 மீட்டர் நீளமும், 07.20 மீட்டர் அகலமும (23 அடி சாலையாகவும்), மூலை முடக்கு உட்பட மொத்தம் 2419.79 சதுர மீட்டர் இடத்தினை பத்திரம் எண்: 1911/2022, நாள்: 05.05.2022-ம் தேதி மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடம் - 33.50 சதுர மீட்டர் இடத்தினை பத்திரம் எண்: 1911/2022, நாள்: 05.05.2022-தேதியில்** மதுரை மாவட்டம், மதுரை தெற்கு ரிடி, திருப்பரங்குன்றம் சப்டி, மதுரை தெற்குத் தாலுகா, தற்போது திருப்பரங்குன்றம் தாலுகா, திருப்பரங்குன்றம் கிராமம், ஆணையாளர் மதுரை மாநகராட்சி என்ற பெயருக்கு பதிந்த அசல் ஆவணங்கள் மற்றும் மனைப்பிரிவில் தார் சாலை அமைத்து அதன் புகைப்படம் ஆகியவற்றை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடங்களை மாநகராட்சி வசம் உள்ள சாலை பதிவேட்டில் பதிவு செய்ய (Road Register) UTIS மென்பொருளில் பதிவு செய்து காலிமனை வரிவிதித்தற்கும் நகரமைப்பு குழு ஒப்புதல் பெறப்பட்டு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 408**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**10.மதி5/011543/2023**

மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மதுரை தெற்கு வட்டம் – மண்டலம் 5 – அயன்பாப்பாகுடி கிராமம், வார்டு : 100 – சர்வே எண்கள்: 74/1, 76/4B–ல் 1.97 ஏக்கர் (8002.59 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க. உத்தேச சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்பிற்கான இடத்தினை ஆணையாளர், மதுரை மாநகராட்சி பெயருக்கு பத்திர பதிவு செய்து அதன் அசல் ஆவணங்களுடன் உதவி இயக்குநர், உறுப்பினர் செயலர்(பொ), மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம். மதுரை அவர்களின் ந.க.எண்: 5281/2021/மதி2, நாள்: 11.07.2022-ம் தேதிய செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு இவ்வலுவலகம் வரப்பெற்றுள்ளது.

மேற்கண்ட மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மதுரை தெற்கு வட்டம் – மண்டலம் 5 – அயன்பாப்பாகுடி கிராமம், வார்டு : 100 – சர்வே எண்கள்: 74/1, 76/4B–ல் 1.97 ஏக்கர் (8002.59 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் **சாலைக்கான இடம் Iவது (1–1) வடபுறம் சாலையானது 24.30 மீட்டர் நீளமும், 10.00 மீட்டர் அகலமும (33 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் Iவது (1–1) தென்புறம் சாலையானது 94.35 மீட்டர் நீளமும், 10.00 மீட்டர் அகலமும் (33 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் IIவது (2–2) சாலையானது 31.50 மீட்டர் நீளமும், 07.20 மீட்டர் அகலமும் (23 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் IIIவது (3–3) சாலையானது 32.55 மீட்டர் நீளமும், 07.20 மீட்டர் அகலமும் (23 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் IVவது (4–4) சாலையானது 39.80 மீட்டர் நீளமும், 09.14 மீட்டர் அகலமும (30 அடி சாலையாகவும்),**

சாலைக்கான இடம் Vவது (5–5) சாலையானது 35.75 மீட்டர் நீளமும், 09.14 மீட்டர் அகலமும் (30 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் VIவது (6–6) சாலையானது 38.35 மீட்டர் நீளமும், 07.20 மீட்டர் அகலமும் (23 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் VIIவது (7–7) சாலையானது 41.30 மீட்டர் நீளமும், 07.20 மீட்டர் அகலமும (23 அடி சாலையாகவும்), மூலை முடக்கு 14,61 சதுர மீட்டர் உட்பட மொத்தம் 2926.78 சதுர மீட்டர் இடத்தினை பத்திரம் எண்: 6892/2022, நாள்: 17.05.2022-ம் தேதி மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடம் - 29.92 சதுர மீட்டர் இடத்தினை பத்திரம் எண்: 6894/2022, நாள்: 17.05.2022-தேதியில் மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், அயன்பாப்பாகுடி கிராமம், ஆணையாளர் மதுரை மாநகராட்சி என்ற பெயருக்கு பதிந்த அசல் ஆவணங்கள் மற்றும் மனைப்பிரிவில் தார் சாலை அமைத்து அதன் புகைப்படம் ஆகியவற்றை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடங்களை மாநகராட்சி வசம் உள்ள சாலை பதிவேட்டில் பதிவு செய்ய (Road Register) UTIS மென்பொருளில் பதிவு செய்து காலிமனை வரிவிதித்தற்கும் நகரமைப்பு குழு ஒப்புதல் பெறப்பட்டு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 409**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**11.மதி2/012336/2023**

மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மதுரை மேற்கு வட்டம் – மண்டலம் 2 – கோச்சடை கிராமம், வார்டு : 66 – சர்வே எண்கள்: 2/3 (R.S.No: 111/5A), 2/4, (R.S.No: 111/7), 2/6(R.S.No: 111/9), 2/7(R.S.No: 111/5B), 2/8 (R.S.No: 111/8), 2/9 (R.S.No: 111/3, 6, 9), 49/6A–ல் 2.11 ஏக்கர் (8568.00 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க. உத்தேச சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்பிற்கான இடத்தினை ஆணையாளர், மதுரை மாநகராட்சி பெயருக்கு பத்திர பதிவு செய்து அதன் அசல் ஆவணங்களுடன் உதவி இயக்குநர், உறுப்பினர் செயலர்(பொ) மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம். மதுரை அவர்களின் ந.க.எண்: 12368/2023/SWP-7I6HCPV5/2023/TCP, Dt: 27.09.2023-ம் தேதிய செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு இவ்வலுவலகம் வரப்பெற்றுள்ளது.

மேற்கண்ட மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மதுரை மேற்கு வட்டம் – மண்டலம் 2 – கோச்சடை கிராமம், வார்டு : 66 – சர்வே எண்கள்: 2/3 (R.S.No: 111/5A), 2/4, (R.S.No: 111/7), 2/6(R.S.No: 111/9), 2/7(R.S.No: 111/5B), 2/8 (R.S.No: 111/8), 2/9 (R.S.No: 111/3, 6, 9), 49/6A–ல் 2.11 ஏக்கர் (8568.00 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் சாலைக்கான இடம் Iவது (1–1) சாலையானது 45.20 மீட்டர் நீளமும், 10.00 மீட்டர் அகலமும் (33 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் IIவது (2–2) சாலையானது 53.52 மீட்டர் நீளமும், 09.00 மீட்டர் அகலமும் (30 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் IIIவது (3–3) சாலையானது 52.45 மீட்டர் நீளமும், 09.00 மீட்டர் அகலமும் (30 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் IVவது (4–4) சாலையானது 54.02 மீட்டர் நீளமும், 07.20 மீட்டர் அகலமும் (23 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் Vவது (5–5) சாலையானது 20.75 மீட்டர் நீளமும், 07.20 மீட்டர் அகலமும (23 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் VIவது (6–6) சாலையானது 117.97 மீட்டர் நீளமும், 07.20 மீட்டர்

**அகலமும் (23 அடி சாலையாகவும்), ரூலை முடக்கு உட்பட மொத்தம் 2804.50 சதுர மீட்டர் இடத்தினை பத்திரம் எண்: 3439/2023, நாள்: 14.08.2023-ம் தேதி மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடம் - 30.35 சதுர மீட்டர் இடத்தினை பத்திரம் எண்: 3439/2023, நாள்: 14.08.2023-தேதியில** மதுரை மாவட்டம், மதுரை தெற்கு பதிவு மாவட்டம், கோச்சடை கிராமம், ஆணையாளர் மதுரை மாநகராட்சி என்ற பெயருக்கு பதிந்த அசல் ஆவணங்கள் மற்றும் மனைப்பிரிவில் தார் சாலை அமைத்து அதன் புகைப்படம் ஆகியவற்றை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடங்களை மாநகராட்சி வசம் உள்ள சாலை பதிவேட்டில் பதிவு செய்ய (Road Register) UTIS மென்பொருளில் பதிவு செய்து காலிமனை வரிவிதித்தற்கும் நகரமைப்பு குழு ஒப்புதல் பெறப்பட்டு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 410**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

12.**மதி 1/008972/2023**

மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மதுரை வடக்கு வட்டம் – மண்டலம் 1 – வார்டு 08, சிறுதூர் கிராமம் – சர்வே எண்கள்: 91/1–ல் 0.78 ஏக்கர் (3135.00 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க. உத்தேச சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்பிற்கான இடத்தினை ஆணையாளர், மதுரை மாநகராட்சி பெயருக்கு பத்திர பதிவு செய்து அதன் அசல் ஆவணங்களுடன் உதவி இயக்குநர், உறுப்பினர் செயலர்(பொ) மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம். மதுரை அவர்களின் ந.க.எண்:11310/2023/SWP/AQSFL6AG/2022/TCP, Dt:26.06.2023-ம் தேதிய செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு இவ்வலுவலகம் வரப்பெற்றுள்ளது.

